திருமதி ப. சரஸ்வதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாழ்த்தப்பட்டோர்களுக்கு அந்தந்த பகுதிகளில் உள்ள நத்தம், புறம்போக்கு ஆகியவற்றில், பட்டாக்கள் கொடுக்கப்பட்டு, வீடுகள் கட்டிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். ஆனால், நான் குறிப்பிட்ட பெருங்குறிச்சி, இராமதேவம் போன்ற பகுதிகளில் வசிக்கக்கூடிய மக்கள் பாறையின் மேல் குடியிருக்கிறார்கள். 100 குடும்பங்கள் அங்கே வசிக்கின்றன. அப்பகுதியில் காவிரி ஆறு ஓரமாக இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கக்கூடிய நிலச்சுவான்தாரர்கள் நிலத்தைக் கொடுக்க முன்வருவதில்லை. வழக்கு மன்றத்திற்குச் சென்று விடுகிறார்கள். பலகாலம் நிலுவையில் இருக்கக்கூடிய அந்த வழக்குகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே முடித்து, அந்த நிலத்தை எடுத்து, அந்த ஏழை அருந்ததியர் மக்களுக்கு விரைவில் நிலப்பட்டா வழங்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறிய கோரிக்கை இரண்டையும் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். அவர்கள் குறிப்பிட்டு எந்தக் கிராமம் என்று சொன்னால், அதுபற்றி ஆய்வு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் வினா எண். 299, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

299—

வெம்பக் கோட்டை நீர்த்தேக்கத்திலுள்ள மீன் வளர்ப்புப் பண்ணை.

*10558.—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தில் எந்தெந்த வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன ?

(ஆ) இந்த மீன் வளர்ப்புப் பண்ணையால் அரசின் வருமானம் ஆண்டிற்கு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வெம்பக்கோட்டை நீர்த்தேக்கத்தில் கட்லா, ரோகு, மிர்கால், சாதாக்கெண்டை, வெள்ளிக்கெண்டை போன்ற பெருரக மீன்குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு, மீன்பிடிப்பு நடத்தப்பட்டு வருகிறது.

1993 ஏப்ரல் 8]

(ஆ) வெம்பக்கோட்டை மீன் பண்ணையில் அரசுக்குக் கிடைத்த ஆண்டு வாரியான நிகர வருமானம் என்று பார்க்கும் போது, கிட்டத்தட்ட 6 ஆண்டுகளில், ரூ. 5 லட்சத்து, 62 ஆயிரத்து 841 ரூபாய் 20 காசுகள் கிடைக்கப்பெற்று இருக்கிறது.

முற்பகல் 11-10

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே குறிப்பிட்ட அந்த மீன்கள் எல்லாம் மிகச் சாதாரண மீன் வகைதான். It is tredition l culture We need adv nced culture: modern culture அதாவது ஃபிரஷ் வாட்டர் பிரான் கல்சர், சில்வர்காட், ரோகார் கல்சர், என்ற அந்த வகைகள் அதிக அளவு வருமானம் ஈட்டக் கூடிய அந்த மீன்களை அங்கே வளர்ப்பதற்கும், தனியார் அந்த மீன்களை நீர்த்தேக்கத்திற்கு அருகே வளர்ப்பதற்கும் அரசு மானியம் அளிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரஷ் வாட்டர் பிரான் அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று சொல்கிறார். பிரஷ் வாட்டர் பிரான் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னால், கிட்டத்தட்ட கடலிலிருந்து டி. மோனடா மற்றும் டி. இண்டிகேட்ஸ் என்ற வகைகள் சுலபமாகக் கிடைக்கிறது. அதன்மூலம் நாம் அந்த கல்சரை ஈசியாகச் செய்யமுடியும். ஆனால் நன்னீர் இறால் வளர்ப்பு, அதாவது மேக்ரோ பிராஞ்சியம் புரோசன் பர்ஜ் என்று சொல்லக்கூடிய வகை அந்த தாய் இறால், மதர் பூருட் கிடைப்பதற்கு மிகவும் அரியதாக இருக்கிறது. அதனைக் கருத்தில் கொண்டுதான், இன்றைக்கு நமது தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த மதர் புரூடலிருந்து ஹேச்சரி நன்னீர் இறால் குஞ்சுப் பொறிப்பகத்தை ஆரம்பிப்பதற்கு ரூ. 2.5 இலட்சத்தை மானியமாக ஒருவரே ஆரம்பித்தால் கூட, அவர்களுக்கு கிட்டத்தட்ட ரூ. 2.5 இலட்சத்தை வழங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் மூலம் அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்னீர் இறால் பொறிப்பகம் மற்றும் நன்னீர் இறால் வளர்ப்புக்கு வேண்டிய முயற்சியை செய்வாராயின், அந்த முயற்சிக்கு அரசு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன் : அதே நேரத்தில் தேக்கத்திலே 3 மாதங்களுக்குள்ளாகவே 4 கிலோ அளவை எட்டிவிடும் சில் வ காட் மற்றும் ரோகார் போன்ற மீன் இனங்களை அங்கே வளர்க்க அரசு முன்வருமா என்பதை அரிய விரும்புகிறேன்,

[1993 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்திலே சில்வர்காட் மற்றும் ரோகார், கட்லா, மிர்கால் போன்ற வகைகள் வளர்க்கப் பட்டு வருகிறது தேவையான அளவிற்கு அவர் எவ்வளவு கேட் கின்றாரோ, அந்த அளவிற்கு அந்தவகை மீன் குஞ்சுகள் அந்த வெம்பக்கோட்டை நீர்த் தேக்கத்திலே கொடுக்கப்பட்டு மீன்கள் வளர்ப்பதற்குரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் : வினா எண். 300, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு ஊரகத்தொழில் துறை அமைச்சர். 300—

வெளிநாடுகளுக்கு பனை நுங்கு ஏற்றுமதி.

*10279.—திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா ?

(அ) தமிழ்நாட்டிலிருந்து பனை நுங்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலிருந்து பனை நுங்கு வெளிநாடுகளுக்கு இதுகாறும் ஏற்றுமதி செய்யப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளில் குறிப்பாக அரேபியா போன்ற வெளிநாடுகளில் இந்த பனை நுங்குக்கு அதிகமாக கிராக்கி இருப்பதாக அங்கேயிருந்து வருபவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அதனால் நமக்கு வெளிநாட்டுச் செலாவணி கிடைக்க வாய்ப்பு இருப்பதால், அமைச்சரவர்கள் அதற்கு எதிர்காலத்தில் இந்த பனை நுங்கை ஏற்றுமதி செய்வதற்கென்று தனியாக ஒரு வாரிய யத்தை உருவாக்க ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் நுங்கு அதற்குரிய பருவ காலங்களில் மட்டும்தான் கிடைக்கும். அவ்வாறு பருவ காலங்களில் கிடைக்கும் நுங்கானது, உள்நாட்டிலே உற்பத்தி யாகும் அந்த நுங்கானது உள்நாட்டுத் தேவைக்குப் போதுமான